# நீகரன்

இதழ் 3/மாத இதழ்/மார்ச் 2015/தனிச்சுற்றுக்கு மட்டும்




## மார்ச் 8 'உலக மகளிர் தினம்'

ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவிலோங்கி இவ் வையம் தழைக்குமாம்
பூணு நல்லறத் தோடிங்குப் பெண்ணுருப்
போந்து நிற்பது தாய்சிவ சக்தியாம்;
நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்;
ஞான நல்லறம் வீர சுதந்திரம்
பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்;
பெண்மைத் தெய்வத்தின் பேச்சுகள்
கேட்டிரோ!

மகாகவி
பாரதியார்

# பெண்மை வாழ்கென்று கூத்திடுவோமடா..

மார்ச் 8. உலக மகளிர் தினம். சர்வதேச உழைக்கும் மகளிர் தினம் என்றும் அழைக்கப்படுகிறது. இந்த நாள் உலகம் முழுவதிலும் பெண்களின் மேலதிக சமத்துவத்திற்கான அறைகூவல் விடுக்கும் நாளாக மட்டுமல்லாமல் மகளிரின் சாதனைகளைக் கொண்டாடுவதற்கான ஒரு வாய்ப்பாகவும் கருதப்படுகிறது.

வரலாற்றில் முதன்முதலாக நியுயார்க் நகரத்தில் அமெரிக்க சோசலிசக் கட்சியால் 1909 ஆம் ஆண்டு பெப்ருவரி 28 ஆம் நாள் மகளிர் தினம் அனுஷ்டிக்கப்பட்டது. 1908 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதத்தில் நியுயார்க் நகர வீதிகளில் குறைந்த வேலை நாளுக்காகவும், அதிகக் கூலிக்காகவும், பெண்கள் வாக்குரிமைக்காகவும் 15,000 பெண்கள் பங்கேற்ற பேரணி நடைபெற்றது. அந் நிகழ்வை நினைவுகூரும் விதத்தில் 1909 ஆம் ஆண்டில் மகளிர் தினம் அனுஷ்டிக்கப்பட்டது. 1913 ஆம் ஆண்டுவரை ஒவ்வொரு ஆண்டும் பெப்ரவரி மாதம் கடைசி ஞாயிற்றுக்கிழமை இவ்வாறு மகளிர் தினமாக அனுஷ்டிக்கப்பட்டு வந்தது.

1910 ஆம் ஆண்டில் ஐரோப்பாவின் டென்மார்க் நாட்டிலுள்ள கோபென்ஹேகன் நகரில் நடைபெற்ற 2வது சர்வதேச உழைக்கும் மகளிர் மாநாட்டில்தான் உலக மகளிர் தினம் கொண்டாடுவதற்கான அறைகூவல் ஜெர்மன் சமூக ஜனநாயகக் கட்சியின் பிரபலமான தலைவர்களில் ஒருவரான கிளாரா ஜெத்கினால் முன்மொழியப்பட்டது. அந்த மாநாட்டில் 17 நாடுகளைச் சேர்ந்த 100 பெண்கள் கலந்து கொண்டிருந்தனர். இதனடிப்படையில் ஆஸ்திரியா, டென்மார்க், ஜெர்மனி மற்றும் சுவிட்சர்லாந்தில் மார்ச் 19ஆம் நாள் சர்வதேச மகளிர் தினமாகக் கொண்டாடப்பட்டது.

பிறகு மார்ச் 8ஆம் நாள் சர்வதேச மகளிர் தினம் ஆனது எப்படி என்று கேட்கிறீர்களா?

1917 ஆம் ஆண்டு முதலாம் உலகப் போர் நடைபெற்றுக்கொண்டிருந்த போது ரஷ்ய நாட்டின் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் நகரில் ஆயிரக்கணக்கான பெண்கள் போரில் மடிந்துபோன 2 மில்லியன் ரஷ்யப் போர் வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக உணவும் அமைதியும் (Bread and Peace) கோரிப் பேரணியாக அணிவகுத்துச் சென்றனர். அவர்களின் இந்தப் போராட்டத்தின் தொடர்ச்சியாக ஜார் மன்னன் முடிதுறக்கும்படி நிர்பந்திக்கப்பட்டான். அப்போது பதவியில் இருந்த தாற்காலிக அரசு பெண்களுக்கு வாக்குரிமை வழங்கும் சட்டத்தை நிறைவேற்றியது. அந்த நாள் ரஷ்ய நாட்காட்டியான 'ஜூலியன்' நாட்காட்டியின்படி பெப்ரவரி மாதம் ஞாயிற்றுக்கிழமை 23ம் நாள். அதுவே பிற உலக நாடுகள் பலவற்றில் நடைமுறையில் இருந்த 'கிரகோரியன்' நாட்காட்டியின்படி மார்ச் 8ஆம் நாள் ஆகும்.

1975 ஆம் ஆண்டு முதல் ஐக்கிய நாடுகள் சபை இந்த நாளையே சர்வதேச மகளிர் தினமாக ஏற்றுக்கொண்டது .

■

# நிகரன்

□

தனிச்சுற்றுத்
தமிழ் மாத இதழ்

□

இதழ் 3
மார்ச் 2015

□

தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்க
உறுப்பிதழ்
பதிவு எண்: 493/2015

□

வடிவமைத்து வழங்குபவர்:


பா. பாஸ்கரன்,
3/806, எம்.ஜி.ஆர் நகர்,
டி.என்.சி கிராஸ் ரோடு,
ஆலங்குளம் - 626127
இராஜபாளையம் (வழி)
விருதுநகர் மாவட்டம்.

□

பேசி: 9786805027


□

முன் அட்டைப் புகைப்படம்:
டெல்லியில் நடைபெற்ற ஒரு மகளிர் பேரணி

□

படைப்புகள் மற்றும் கடிதங்கள் அனுப்புவோர் அனுப்பியபின் அதுபற்றிக் குறுஞ்செய்தி மூலமோ அல்லது நேரடியாக அழைத்தோ தெரிவிக்கவும்

## நிகரன் பேசுகிறேன்..

வாழ்வதற்காகப் போராடுவதும் போராடுவதற்காக வாழ்வதும் எமக்கு இசைவான கொள்கைகள். முதல் இதழ் வெளியான நேரத்திலேயே நின்று போவதுதான் சிற்றிதழ் என்ற அனுபவப் பாடத்தை நண்பர்கள் பலர் எனக்கு நினைவுபடுத்தினர். இந்தப் பிரபஞ்சத்தில் எல்லாவற்றுக்கும் ஒரு முடிவு உண்டு. ஆனால் வாழ்நாள் ஒவ்வொன்றுக்கும் வேறு வேறாக இருக்கிறது. மனிதவாழ்வுகூட அப்படித்தான். நாளைக்கு செத்துவிடுவோம் என்பதற்காக தனது தினசரி வேலைகளை எவரும் செய்யாமல் விட்டுவிடுவதில்லை. அந்த வகையில் நிகரனும் வாழ்வதற்காக இறுதிவரை போராடுவான். எந்த ஒரு பயணத்திற்கும் தடைகள் இருக்கவே செய்யும். இலக்கை நோக்கிய பயணம் தடைகளைத் தாண்டி முன்னேறிச் செல்வதில்தான் சிறப்படைகின்றது. நண்பர்கள், உறவினர்கள், குடும்பம், அமைப்புகள், அரசு எனப் பலவகையிலும் முன்வரும் தடைகளைத் தாண்டி நிகரன் தன் பயணத்தைத் தொடரப் போராடுவான். தொடர்ந்து இதழைத் தாங்கள் வாசிப்பதோடு பிறருக்கும் அறிமுகம் செய்தவர்கள், இதழின் வளர்ச்சிக்கு நல்ல பல ஆலோசனைகளை வழங்கியவர்கள், படைப்புகள் அனுப்பியவர்கள், நன்கொடை அளித்து உதவியவர்கள் அனைவருக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றிகளைச் சமர்ப்பிக்கிறோம். குறிப்பாக தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்கத்தில் எம்மை உறுப்பினராக ஏற்றதோடு கனிவோடு பல கருத்துக்களைப் பகிர்ந்துகொண்ட சங்கத்தின் தலைவர் திரு. பூ. அ. இரவீந்திரன் அவர்களுக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். அதிகபக்கங்களில் எழுதப்படும் கட்டுரைகள் மற்றும் சிறுகதைகள் இப்போதைக்கு இதழில் வெளியிட முடியாத நிலை உள்ளது. படைப்புகளில் தட்டச்சுப் பிழைகளும், இலக்கணப் பிழைகளும் நேர்ந்து விடுகின்றன என்பதற்காக வருந்துகிறோம். வரும் இதழ்களில் கூடுதல் கவனம் எடுத்துப் பிழைகளைக் குறைக்க அல்லது தவிர்க்க இயன்றவரை முயற்சிப்போம். விரைவிலேயே இதழை சமூக வலைத்தளங்களில் வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். தவறுகள் திருத்தப்பட்டு அதில் வெளியிடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். மீண்டும் சந்திப்போம்.

## மாறியதும் மாறாததும்

வெற்றிலை உரலில்
பாக்கு இடித்தபடி
பவுன் விலை பத்து ரூபாய் என
பழங்கதை பேசுவாள் பாட்டி
என்று
இதுவரை சொல்லிக் கொண்டிருந்தாள் அம்மா
தன் நகையற்ற கழுத்தை
நாசூக்காய் தடவியபடி.
கண்மாய்க்கரைக் கரிசல்காட்டையும்
சாலையோர செவல்காட்டையும்
நானூறு ரூபாய்க்கு விற்றதற்காக
நாலு மாசம் பேசாமலிருந்தாளாம் ஐயாவுடன்.
அகரவரிசை எனக்கு
அறிமுகமான புதிதில்
அரிசிவிலை அஞ்சு ரூபாய்க்கு
வந்துவிடுமென்று
அச்சத்தில் நடுங்கிய ஐயாவை
இப்பவும் ஞாபகமிருக்கிறது எனக்கு.
பவுன் தங்கத்தின் விலை
நூறு ரூபாய்க்கு உயர்ந்த போது
அதே பேச்சாக இருந்தது ஊரெல்லாம்.
அன்று போலவே
இன்றும் மாறாமலிருக்கும்
எங்கள் ஏக்கப் பெருமூச்சை
ரசித்த வண்ணம்
நகைத்தபடி நகர்ந்து செல்லும் காலம்.

❐ **எஸ். ஒ. வீரன்,** *சிவகாசி மேற்கு.*



## குறள் நெறி

**உள்ளற்க உள்ளம் சிறுகுவ கொள்ளற்க**
**அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு.** *(குறள்: 798)*

நம்முடைய ஊக்கம் குறைவதற்கு ஏதுவான கருத்துக்களையும், நமக்கு துன்பம் வந்த போது நம்மைக் கைவிட்டு விலகுகின்ற நண்பர்களையும் நினைத்துப் பார்க்காமலே இருந்துவிட வேண்டும்.

# மார்ச் 14 - மாமேதை காரல் மார்க்ஸ் நினைவு தினம்

"மார்க்ஸ் பாட்டாளி வர்க்கத்திற்குச் சொந்தம். எல்லா நாடுகளிலும் உள்ள பாட்டாளி வர்க்கத்திற்காக அவர் தம் வாழ்வை அர்ப்பணித்தார். சிந்திக்கும் திறம் படைத்த, சிந்தித்து வருகிற சகல நாடுகளின் பாட்டாளி மக்களும் நன்றியறிவுடன் அவரைப் போற்றுகிறார்கள்.

நம் மீது விழுந்துள்ள அடி மிகவும் பலமானது. ஆனால், நாம் துக்கப்படவில்லை. இறந்தவர் உண்மையில் இறக்கவில்லை. பாட்டாளி வர்க்கத்தின் இதயத்தில் அவர் வாழ்கிறார். அவரது நினைவு என்றும் அழியாது. அவரது கோட்பாடு இன்னும் விரிவான அளவுக்குப் பரவும்.

துக்கத்தில் ஈடுபடுவதற்குப் பதில் மறைந்த அந்த மாமனிதனின் உணர்ச்சியோடு நாம் செயல்படுவோமாக. நமது பலம் முழுவதையும் ஈடுபடுத்தி அவர் எந்த மகத்தான கொள்கையை நமக்குப் போதித்து, அதற்காக போராடினாரோ அந்தக் கொள்கையைக் கூடியவிரைவில் நடைமுறையில் செயல்படுத்த முழுபலத்துடன் முயல்வோமாக. இதுவே அவரது நினைவை நாம் கவுரவிக்கும் மிகச்சிறந்த வழியாகும்."

■ வில்லியம் லீப்னெக்ட்.

மார்க்ஸ் மற்ற எல்லாவற்றிற்கும் முன்னதாக ஒரு புரட்சியாளர். முதலாளித்துவ சமூகத்தையும், அது கொண்டு வந்த அரசாங்க அமைப்புகளையும் ஏதாவது ஒரு வழியில் தூக்கியெறிந்து, எந்த நவீன பாட்டாளி வர்க்கம் அதன் நிலைமையினையும், தேவையையும், விமோசன வகைகளையும் உணருமாறு செய்வதில் தாம் முதல்வராக இருந்தாரோ, அந்த நவீனகாலப் பாட்டாளி வர்க்கத்தின் விமோசனத்திற்குப் பாடுபட வேண்டும் என்பதே அவரது வாழ்க்கையின் உண்மையான லட்சியம். போராட்டம் அவரது உடன்பிறப்பு. அவர் எவ்வளவு பேராவேசத்துடன், பிடிவாதத்துடன் வெற்றிகரமாகப் போராடினாரோ அவ் வாறு ஒரு சிலரால்தான் போராடமுடியும்.

இதன் விளைவாக அவர் காலத்தவர்களில் எல்லோரையும்விட மிக அதிகமாக மார்க்ஸ் வெறுக்கப்பட்டார். அவதூறு செய்யப்பட்டார். எதேச்சாதிகார அரசாங்கங்களும், குடியரசு அரசாங்கங்களும் அவரைத் தத்தம் பிரதேசங்களிலிருந்து நாடுகடத்தின. பூர்ஷ்வா வர்க்கம், பழைய வழக்கங்களில் நம்பிக்கையுள்ளதும் சரி, அதி தீவிர ஜனநாயகமானதும் சரி அவர் மீது அபாண்டங்களைக் குவிப்பதில் ஒன்றோடொன்று போட்டியிட்டன. ஆனால், இவற்றையெல்லாம் அவர் வெறும் ஒட்டடையென்று ஒதுக்கி அசட்டை செய்தார். தவிர்க்க முடியாத அவசியம் நிர்பந்தித்த போது மட்டும் பதிலளித்தார். அவர் இறந்தபோது சைபீரியா சுரங்கங்களிலிருந்து கலிபோர்னியா வரை, ஐரோப்பா, அமெரிக்காவின் சகல பகுதிகளிலிருந்தும் லட்சக்கணக்கில் புரட்சிகரமான சக ஊழியர்கள் அவரிடம் அன்புகொண்டு அவருக்கு அஞ்சலி செலுத்தி துக்கம் அநுசரித்தார்கள். அவருக்கு எத்தனையோ எதிரிகள் இருந்திருந்தாலும், சொந்த விரோதி என்று ஒருவர்கூட இல்லையென்று நான் துனிந்து கூறுவேன்.

"அவரது பெயரும், அவரது சேவையும் யுக யுகாந்திரங்களுக்கு நிலைத்து நிற்கும்".

■ பிரடெரிக் எங்கெல்ஸ்.

நூல்: மார்க்ஸ் - எங்கெல்ஸ் நினைவுக் குறிப்புகள்.

**இலவச சானிட்டரி நாப்கின் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும்.**

பெண்களின் சுகாதாரத்தையும், நலனையும் மேம்படுத்தும் வகையில் தமிழக அரசு 10 வயது முதல் 19 வயதுவரை உள்ள கிராமப்புற பெண்களுக்கும், பெண் சிறைக்கைதிகளுக்கும், குழந்தைகளுக்கும், தாய்ப்பால் கொடுக்கும் பெண்களுக்கும் இலவச சானிட்டரி நாப்கின் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது. இது வரவேற்கத் தக்கது. இத்திட்டத்தை சானிடரி நாப்கின் தேவைப்படும் பருவத்தில் உள்ள அனைத்து மாணவிகளுக்கும், கிராமப்புற பெண்களுக்கும், வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள பெண்களுக்கும் வழங்கிட வேண்டும்.

**பாலியல் வன்முறைகளை தடுத்திட மத்திய-மாநில அரசுகள் உரிய நடவடிக்கைகளை எடுத்திட வேண்டும்.**

தமிழகத்திலும் இந்தியாவிலும் அதிகரித்து வரும் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகளைத் தடுத்திட மத்திய-மாநில அரசுகள் உரிய நடவடிக்கைகளை எடுத்திட வேண்டும். தமிழ்நாடு அரசு அலுவலகங்களில் பெண்களுக்கு எதிரான பாலியல துன்புறுத்தல்களை விசாரிக்க விஷாகா வழக்கின் மூலம் உச்ச நீதிமன்றம் காட்டிய வழிகாட்டுதல் அடிப்படையில் பெண்களைத் தலைவர்களாகக் கொண்ட குழுக்களை அமைக்க வேண்டும்.



# இரண்டு கோரிக்கைகள்

*(அனைத்திந்திய முற்போக்குப் பேரவையின் தமிழ்நாடு மாநில முதல் மாநாட்டுத் தீர்மானத்திலிருந்து)*

## சமாதானபுரம்

பந்தல் படர்ந்த கொடியுடன் ஒரு வீடு
பரந்து விரிந்த முற்றத்துடன் ஒரு வீடு
பகட்டாய் பளிங்கு கற்களுடன் ஓர் வீடு
பட்டுப் போன முள்வேலியாய் ஓர் வீடு
பால் வண்ணமாய் மின்னிடும் ஒரு வீடு
பாழடைந்து பழையதாய் ஒரு வீடு
ஒவ்வொன்றும் வேறு வேறாக..
வேறு வேறானவையெல்லலாம் ஓர் தொகுப்பாக.
எண்ணிப் பார்க்கிறேன்..
என் வருகையை வரவேற்ற பலகையில்
“சமாதானபுரம்”

❒ **ஆர். சோம்நாத் பாபு,** *திருத்தங்கல்.*






## ஈஸ்வர் அல்லா தேரே நாம்

1948 ஜனவரி 20 அன்றே மகாத்மாவைக் கொலை செய்ய ஒரு முயற்சி நடந்தது. வெறி பிடித்த இளைஞன் ஒருவன் வெடிகுண்டு வீசினான். நல்ல வேளையாக அது இவர் மீது படவில்லை.

அவன் யாரென்றால் மசூதி ஒன்றை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தவன். அங்கிருந்து அவனைப் போலீஸ் வெளியேற்றியதால் வெறிகொண்டு மகாத்மாவைக் கொலை செய்ய வந்தான். அவன் தனி ஆளும் அல்ல. இதுபற்றி மகாத்மா அடுத்த நாள் பிரார்த்தனைக் கூட்டத்தில் கூறினார்-

“இளைஞன் மசூதியை ஆக்கிரமித்துக் கொண்டது தவறாகும். மசூதியைக் காலி செய்யும்படி கூறிய அதிகாரிகளுக்குக் கீழ்ப் படியாதது இரட்டிப்புக் குற்றமாகும். அத்தகைய நடவடிக்கைகளைத் தவிர்க்கும்படி அந்த இளைஞனுக்கு பக்கபலமாக இருப்போரை நான் கேட்டுக் கொள்கிறேன். ஹிந்து மதத்தைப் பாதுகாப்பதற்கு அது வழியல்ல”.

தன்னைக் கொலை செய்ய வந்தவன் பின்னால் இந்து மதவெறிக் கூட்டம் - மசூதியைக் கைப்பற்றுகிற கூட்டம் - உள்ளது என்பதை மகாத்மாவே சாட்சியாய் நின்று கூறிச் சென்றுள்ளார். அப்படியும் அந்தக் கூட்டம் அடங்கவில்லை. ஜனவரி 30ல் நாதுராம் கோட்சே மூலம் தனது ரத்த வெறியைத் தணித்துக் கொண்டது. கோட்சே இந்துத்துவா கொள்கையில் ஊறித் திளைத்தவன் என்பதை நீதிமன்றத்தில் அவனளித்த வாக்கு மூலம் உறுதி செய்தது. பகவத் கீதை மீது அவனுக்கிருந்த நம்பிக்கை உறுதி செய்தது. இந்து மகாசபை ஆர். எஸ். எஸ் சில் அவன் உறுப்பினனாய் இருந்தது உறுதி செய்தது.

❒ **அருணன்,** நூல்: இந்து மதவெறி: முகமும் முகமூடிகளும், பக்கம்:111, வசந்தம் வெளியீட்டகம்.

# அலைகள்

❐ புலவர் வெ. அ. சாமி,
*ஆலங்குளம்.*

கடலலைகளைக் கண்ணாரப் பார்க்க இயலும், காந்த அலைகளை, ஒலி அலைகளை, ஒளி அலைகளை, மின் அலைகளை, எண்ண அலைகளைக் கண்ணாரக் காண இயலாது. காந்த அலைகள் இருப்பதை சில பரிசோதனைகள் வாயிலாக அறியலாம். ஒலி, ஒளி அலைகளைத் தொலைக்காட்சி, கைப்பேசி மூலம் தெரிந்து கொள்கிறோம். மின் அலைகள் மூலம் மின்விளக்குகள், மோட்டார்கள் மற்றும் பல கருவிகள் இயங்குவதைக் காண்கிறோம். இவைகளை நன்கு அறிந்தவர்கள் பயன்படுத்தும்போது அது நீடித்து உழைக்கிறது. தவறாகப் பயன்படுத்தும் போது பழுதுபட்டுப் போகிறது.

மன அலைகள் அல்லது எண்ணங்களின் அலைகள் பரவிச் செல்வதை யாராலும் உணர முடியவில்லை. ஒரு நிலைப்பட்ட மனத்தினையுடையோர் அலைகளின் பயனை அறிவதன் மூலம் எண்ண அலைகளை அறிகின்றனர்.

ஒவ்வொரு உயிரினங்களுக்கும் எண்ண அலைகள் வேறு வேறு வகையில் அமைந்திருக்கின்றன. மனிதன் தனது எண்ணங்களை நெறிப்படுத்தி நல்ல எண்ணங்களை எண்ணினால் நன்மை அடைவான். தீய எண்ணங்களை எண்ணினால் தீமையே விளையும்.

ஒவ்வொரு பொருளின் வடிவத்திற்கு ஏற்ப அதன் நிழல் பூமியில் விழுவதைப் போல, மனிதனின் எண்ணத்திற்கு ஏற்ப பலனைக் காணுகிறான். அறிவியல் மேதை ஐசக் நியூட்டன் அவர்கள் கூறிய தத்துவம் ஒவ்வொரு செயலுக்கும் பிரதிவினை உண்டு என்பதாகும்.

மாணவர்களின் படிப்புத் திறனுக்கு ஏற்ப அவனது மதிப்பெண் அமைகிறது. படிக்கும் முறையை அவன் தெளிவாகக் கற்றுக் கொண்டான். மனத்தைக் குவிக்கும் திறன் அமைந்துவிட்டால் எல்லாத் துறைகளிலும் வெற்றி பெறலாம்.

தீவிரவாதிகள் உள்ளத்தில் அழிக்கும் எண்ணங்கள் அதிகமிருப்பதால் தான் அழிந்தாலும் பரவாயில்லை அநேகரை அழித்தால் அது ஒரு வெற்றி என்று எண்ணுகிறார்கள். அவர்களின் எண்ணப்படியே நிழல் தத்துவம் அமைந்திருப்பதால் பிரதிவினையாக அவர்களும் அழிக்கப்படுகிறார்கள்.

அரசியல்வாதிகள் பலரின் எண்ணம் எப்படியாவது வெற்றி பெற்றால் போதும் என்று பணபலத்தால் வெற்றி பெறுகிறார்கள். பதவிக்கு வந்தவுடன் அவர்களின் எண்ணங்கள் பணத்தைவிட்டு அகல்வதில்லை. விட்ட பணத்தைத் தேடியாக வேண்டும் என்ற எண்ணத்தில் தவறுகள் பல செய்து அதன் மூலமாக நிழல் தத்துவத்தில் வீழ்ந்து பிரதிவினையை அடைகிறார்கள். அவர்கள் குடும்பத்தில் அமைதி இருப்பதில்லை. அழிவுகள், தோல்விகள், நோய்கள் வரிசையில் நின்று அவர்களை ஆட்டிப் படைக்கின்றன.

மக்களின் தீய சிந்தனைகள், தலைவர்களின் தீய சிந்தனைகள் வலிமை அடையும் போது பேரழிவுகள் ஏற்படுகின்றன. நல்லோரின் எண்ண அலைகள் நாட்டைக் காப்பாற்றுகின்றன.

■

## கருகும் மலர்கள்

மாலையாகும் நாளை நோக்கி கன்னிப் பூ.
பூமாலை மாற்றிக்கொள்ளும் மணக் காட்சி,
கன்னி அவள் கனவில் மட்டும் உதிப்பு;
கருநாகங்களுக்கு மத்தியில் அவள் தவிப்பு.
மணக்கோலம் பூண நவீன அடிமை ஒப்பந்தம் -
கயவர்கள் தீட்டிட்ட சுமங்கலி திட்டம்.
பஞ்சாலையின் லாப பசிக்கு அவள்
உடலும் உள்ளமும் உணவானது;
எந்திரத்தோடு எந்திரமாய் அவள் உருமாறியது.
கண்கள் தூக்கத்தை வரவேற்று நின்றது,
கைகள் உழைப்பிலிருந்து சற்றே விடுதலை கேட்டது.
'கனவா காண்கிறாய்?' என உறுமியது ஆணவக் குரல்.
அது அதிகார வர்க்கத்தின் அவயக் குரல்.
உடலும் உள்ளமும் உருக்குலைந்து போனபின்,
நியாயமான ஆசைகளுக்கும் 'சங்கு'தான் இங்கே.
அப்போது அலறியது பஞ்சாலையின் சங்கொலி !

❒ **த. செல்வக்குமார்,**
*மாதாங்கோவில்பட்டி.*

## பெயரின் உயிர்

புனைந்து முடித்த கவிதைக்கு
புனைப்பெயர் தேடினேன்..
இட்டபெயர் இடலாமா?
இடாத பெயர் இடலாமா?
கவிதை பிறக்கும் தருணத்தில்
கவிஞன் இருப்பான் மரணத்தில்
பெயர் ஒரு பொருட்டல்ல
உயிரை ஆளும் கவிதைக்கு
கவிஞனின் பெயர் நிலைக்கும்
கவிதையில் உயிர் இருந்தால்

❒ **க. மாரிச்செல்வம்,**
*செங்கமலநாச்சியார்புரம்.*

இந்தியாவில் சாதி என்பது, செயற்கையாக மக்களைக் குழுக்களாகப் பிரித்து, அவர்களுக்கு இடையே திருமண உறவு தடுக்கப்பட்டதே ஆகும். புறமண முறை மீது அகமண முறையைத் திணித்ததனால்தான் சாதி உருவானது. ஆகவே புறமண முறை இன்றி சாதியை ஒழிக்க இயலாது.

■ அம்பேத்கர்



# நடிப்புலக மேதை சார்லி சாப்ளின்

**இரா. பாலச்சந்திரன்,**
*திருத்தங்கல்.*

ஒரு திறமைமிக்க கலைஞன் தன் வாழ்க்கையிலிருந்துதான் உருவாகிறான். வாழ்க்கை அவன் உள்ளத்தில்பட்டு பிரதிபலிப்பாக வரும் வெளிப்பாடுகளே கலையாக உருவாகிறது. அவ்வகையில் உருவான மேதையே சார்லி சாப்ளின் ஆவார்.

உலக மக்களின் உள்ளம் கவர்ந்த சாப்ளின் 1889 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இங்கிலாந்து நாட்டில் தெற்கு லண்டன் அருகில் 'லாம்பெத்' என்னுமிடத்தில் பிறந்தார். தாயும், தந்தையும் மேடைக் கலைஞர்கள். தந்தையை விட்டுப் பிரிந்த தாய் தன் இரண்டு பிள்ளைகளையும் மிகவும் கஷ்டப்பட்டு வளர்த்தார். பிள்ளை வளர்ப்பதற்காகவே மேடை நிகழ்ச்சிகளைத் தொடர்ந்த தாய் மேடை ஏற முடியாத ஒரு சூழ்நிலையில் தைரியமாக சிறுவன் சாப்ளின் மேடையேறி நிகழ்ச்சி நடத்தி வரவேற்பைப் பெற்றான். பின்னால் பல நாடகக் கம்பெனிகளில் நடித்தான். இவனது நடிப்புத் திறமைகளின் விளைவாக திரைப்படங்களில் நல்ல வாய்ப்பு ஏற்பட்டது.

கீஸ்டோன் என்ற படக் கம்பெனி சாப்ளினைப் பயன்படுத்தி '35' படங்களைத் தயாரித்தது. பின்னர் பல பம்பெனிகள் பல படங்களுக்கு சாப்ளினுடன் ஒப்பந்தம் போட்டன. 'தி ட்ராம்ப்' என்ற படத்தில் பண்பாடான சிந்தனையைத் தூண்டும் குழந்தைக்கும் மனிதனுக்கும் உள்ள குணாதிசயங்களைக் கொண்ட விசித்திர கதாபாத்திரமாகத் தோன்றினார். அந்தப் படம் மக்களிடம் அதிக வரவேற்பைப் பெற்றது. 'த இம்மிகிரண்ட்', 'சோல்ஜர் ஆர்ம்ஸ்' ஆகிய படங்கள் 1917, 1918களில் வெளிவந்தன. 1917லிருந்து இரண்டாம் உலகப் போர் வரையிலான அவருடைய படங்கள் அநீதிகளைச் சுட்டிக் காட்டின. மேலும் ஏகாதிபத்தியங்களின் பேராசையால் தேசபக்தி என்ற பெயரில் போர்களை நடத்தி மக்களைத் துன்பத்தில் ஆழ்த்துவதை எடுத்துக் காட்டின. அடுத்தபடியாகப் புகழ்பெற்ற படம் 'மாடர்ன் டைம்ஸ்'. இப்படத்தில் தொழிலாளர் போராட்டங்களையும், தொழிற்சாலைச் சூழ்நிலையையும் அதில் குறைந்த ஊதியம் மற்றும் வேலையின்மையைச் சமாளித்துவரும் தொழிலாளியாக வருகிறார் சாபளின். அமெரிக்கத் தொழிலாளர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தையும், முதலாளிகளின்

பணத்தாசை மற்றும் சுரண்டல்களையும் வெளிச்சம் போட்டுக் காட்டுகிறார் சாப்ளின். ஒரு தொழிற்சாலையில் பணியாற்றும்போது ஏற்பட்ட உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் சேர்ந்த சாப்ளின் பின்னர் மருத்துவ மணையிலிருந்து வீடு திரும்புகிறார்.திரும்ப வரும் வழியில் சாலையில் ஒரு லாரியிலிருந்து எச்சரிக்கைக்காக ஒரு கம்பில் கட்டப்பட்ட சிவப்புத் துணி ஓடிந்து கீழே விழுகிறது. அதை எடுத்துக்கொண்டு லாரி ஓட்டுபவனிடம் தகவல் சொல்லப் பின்னே ஓடுகின்றார் சாப்ளின். அப்பொழுது தொழிலாளர்களின் செங்கொடி ஊர்வலம் குறுக்கிடுகின்றது. தொழிலாளி சாப்ளினையும் ஊர்வலத்தினருடன் கைது செய்து கொண்டு செல்கிறது போலீஸ். அவர்களை வேனில் ஏற்றிச் செல்கிறது. போலீஸ் வேனில் ஒருத்தி. அவளது தந்தை தொழிற்சாலை வேலை நிறுத்த மோதலில் குண்டடிபட்டு இறந்துவிடுகிறான். அவர்களையும் கைது செய்து கொண்டு போகிறது போலீஸ். அவளுக்கும் சாப்ளினுக்கும் காதல் மலர்ந்து விடுகிறது. இருவரும் வேனிலிருந்து தப்புகிறார்கள்.

இப்படத்தை கம்யூனிஸ்ட் படமென்று அமெரிக்காவும், ஜெர்மனியும், இத்தாலியும் தடை விதித்தன. சில வருடங்களுக்குப் பின் சாப்ளின் ஒரு கம்யூனிஸ்ட் என்று நிரூபிக்க 'மார்டர்ன் டைம்ஸ்' அத்தாட்சியாகப் பார்க்கப் பட்டது. அடுத்து 'தி கிரேட் டிக்டேட்டர்' என்ற படம். இரண்டாம் உலகப் போரில் இட்லர் போர் வெறி கொண்டு மக்களைக் கொன்று குவித்ததைக் கண்டித்து சாப்ளின் இட்லர் போல இரட்டை வேடத்தில் நடித்தார். இப்படம் மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றது. இரண்டாம் உலகப் போரில் இட்லர் ஜெர்மனி ரஷ்யாவைத் தாக்கியது. லட்சக்கணக்கான மக்கள் மடிந்தனர். அமெரிக்க அரசாங்கம் இதை வேடிக்கை பார்த்தது. இதைக் கண்டித்தும் ரஷ்யாவை ஆதரித்தும் பெருங் கூட்டங்களில் பேசினார் சாப்ளின். உரையைக் கேட்க வந்தவர்களை தோழர்களே 'காம்ரேட்ஸ்' என அழைத்தார். மேடையில் சாப்ளின் பேசிய மனித நேயப் பேச்சுக்கள் அவருக்கு எதிராகத் திரும்பின. 1952 இல் சாப்ளினை அமெரிக்கா நாடுகடத்தியது. 1953 இல் சுவிட்சர்லாந்தில் சாப்ளின் குடியேறினார். பின்னர் 'எ கிங் இன் நியூயார்க்' என்ற படம் எடுத்தார். அமெரிக்க அரசு கம்யூனிஸ்ட்களையும் தொழிலாளர் வர்க்கத்தினரையும் வேட்டையாடியது. அதற்கு மெக்கார்த்தி என்ற ஒரு அதிகாரியை நியமித்து விசாரணை செய்தது. இதை எதிர்த்து எடுக்கப்பட்ட படமே இது.

சாப்ளின் 1943 ல் ஊனா என்ற பெண்ணை மணந்தார். 34 ஆண்டுகள் சாப்ளின் மறையும் வரை எட்டு குழந்தைகளைப் பெற்று நல்வாழ்வு வாழ்ந்தனர். 1954ல் உலக சமாதானக் கவுன்சில் விருது வழங்கி கௌரவித்தது. 1962ல் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கி கௌரவித்தது. 1972ல் ஆஸ்கார் விருது இவருக்கு வழங்கப் பட்டது. 1952ல் அமெரிக்காவைவிட்டு வெளியேறிய இவர் 1972ல் விருது வாங்க அமெரிக்கா சென்றார்.

சாப்ளின் தன் நடிப்பின் மூலம் மக்களைச் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்தார். போரை வெறுத்தார். உலக சமாதானத்தை ஆதரித்தார். உழைக்கும் மக்களின் விடியலையே நாடினார்.

வாழ்நாளில் 80 க்கும் மேற்பட்ட படங்கள் தயாரித்து நடித்துப் புகழ்பெற்ற நடிப்புலக மேதை சார்லி சாப்ளின் 1977 ஆம் ஆண்டு டிசம்பர் 25ல் தனது 88வது வயதில் இயற்கை எய்தினார். அவர் புகழ் உலகம் உள்ளவரை இருக்கும்.

"நந்தனுக்கு மோஷம் கொடுத்ததாகவும், பாணனை ஆழ்வாராக்கியதாகவும் கூறும் புராணங்களைக் குற்றங்கூறாதீர்கள் என்கிறார்கள். வாஸ்தவம். இதோ வாயைப் பொத்திக் கொண்டோம். நந்தனுக்கு மோஷம் கொடுத்தது உண்மையானால் அந்த நந்தனுடைய பேரனை ஏன் உள்ளே விடக் கூடாதென்கிறார்கள்? பாணனை ஆழ்வாராக்கியது வாஸ்தவமானால் பாணனின் பேரன் கோயிலுக்குள் போவதை ஏன் தடுக்கிறார்கள்?"

❒ **தந்தை பெரியார்.**



## சுதந்திரம்

இரவிலே வாங்கினோம்
இன்னும் விடியவே இல்லை
என்று
புதுக்கவிதை சொல்லி
புலம்பித் தவிக்கிறார்கள்
பாரதம் முழுவதும்
ஊழல் மன்னர்கள்
பரவிக் கிடக்கையில்
பகலில் வாங்கியிருந்தால் மட்டும்
விடிந்தாவிடப் போகிறது?

❒ **இரா. கதைப்பித்தன்,**
*இராஜபாளையம்.*



## அம்மாக்கள்

இராணுவத்தில் இருப்பதாய்
மார்தட்டிக் கொள்ளும்
அம்மாக்கள் சிலர்
அரசாங்க உத்தியோகத்திலென
அதிகாரத் தோரணையில்
ஒன்றிரண்டு
நூற்பாலையில் சேர்ந்ததைப்
பெருமையாய்ப் பேசும்
அக்கம் பக்கம்
அயல்நாட்டில் பணிபுரிவதாய்
ஆனவத்தில் வந்திறங்கும்
பெரியவீட்டு விருந்தினரின் வரவு
தன்மகன்
சென்னையிலிருக்கிறான்
என்பதைத் தவிர
மிகைப்படுத்திச் சொல்ல
ஒன்றுமில்லை
என்னைப்பற்றி
என் அம்மாவிற்கு.

❒ **நாகா,** *இராஜபாளையம்.*

## போதையின் தேடல்

வேசான தூரல்.. பெருமழையாய்..
விரையும் வாகனங்கள்.
சாலையோரம் ஒதுங்கிய பாதசாரிகளோடு..
கால்நடைகளும்.
பள்ளத்தை நோக்கி பாயும் மழைநீர்.
குளிர் நேரத்தில் சூடுபிடித்த
பிளாட்பாரக் கடைகள்.
வாசலை மறைத்துநின்ற
வாடிக்கையாளரோடு வாகனங்களும்.
மகிழ்ச்சியாய் புரோட்டா வீசும் தொழிலாளி.
இடையில்.. அந்த போதை ஆசாமியின்
ஒய்யாரக் குரல்..
"ஒரு உண்மை தெரிஞ்சாகனும் இப்போ"
சூழ்ந்தது பரபரப்பு.
"வியாபாரம் போச்சு"..
கடைக்காரரின் புலம்பல்.
மழையில் நனைந்து கொண்டே
மீண்டும் அவன்.
"ஒரு உண்மை தெரிஞ்சாகனும் இப்போ..
என் சைக்கிளைத் தள்ளிக்கிட்டு வந்தது யார்?"
அரிதாரம் பூசாத ஒற்றை மனிதன் நாடகம்.
புரிந்தும் புரியாமலும் வேடிக்கை பார்த்த மக்கள்.
தூரத்திலேயே.. புரிந்துகொண்ட போலீசார்.
லத்தியோடு.. விசாரனையும்.
அவன் தொலைத்த சைக்கிள்?
'டாஸ்மாக்' வாசலில்..
நனைந்து கொண்டே.. கேட்பாரற்று!

■ **எம்.சேகர்,** *சிவகாசி.*

## சிரிக்க சிந்திக்க..

**பேங்க் மேனேஜர் விவசாயியிடம்:**
"விவசாயம்பண்ண லோன் வாங்கினத ஏன்யா கட்டல"
**விவசாயி பேங்க் மேனேஜரிடம்:**
"என்ன செய்ய சார்.. விவசாயம் பாத்ததுல கட்டல".

❒ **எஸ். சொக்கர்,** *திருத்தங்கல்.*

## படிக்க வேண்டிய சிறுகதை



## பச்சோந்தி

புகழ்பெற்ற ரஷ்ய எழுத்தாளர் அன்டன் செகாவ் எழுதிய 'பச்சோந்தி' (Chameleon). இது ஒச்சுமெலோவ் என்ற போலீஸ் இன்ஸ்பெக்டரைப் பற்றிய கதை. சந்தைவெளியில் பாராவில் இருக்கும் ஒச்சுமெலோவிடம் தன்னைத் தெருவில் திரியவிடப்பட்ட நாய் ஒன்று கடித்துவிட்டதாக முறையிடுகிறான் ரையூகின் என்ற பாமரன். அதற்காகத் தனக்கு இழப்பீடு பெற்றுத் தர வேண்டும் என்றும் மேலும் அந்த நாய் கொல்லப்பட வேண்டும் என்பதுவும் ரையூகின்னுடைய கோரிக்கைகள். சந்தைக் கூட்டத்தில் மக்களின் பார்வை தன்மீது இருப்பதைக் கண்ட ஒச்சுமெலோவ் தான் பொறுப்புள்ள ஒரு போலீஸ் அதிகாரி என்று காட்டிக் கொள்வதற்காக, ரையூகின்னின் குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டு, "சட்டத்தை மதிக்காத கணவான்களை ஏதாவது செய்தாக வேண்டிய நேரமிது" என்று கர்ஜிக்கிறான். ஆனால் கூட்டத்தில் ஒருவர் அந்த நாய் அந்தப் பகுதியில் வசிக்கும் ஜெனரல் ஒருவருடையது என்று சொன்னவுடன் 'ரையூகின் ஏதோ செய்து அந்த நாயைத் துன்புறுத்தியதால்தான் அது கடித்திருக்கிறது. இல்லையென்றால் அது அவனைக் கடித்திருக்காது' என்று மாற்றிப் பேசுகிறான். இப்படி மீண்டும் மீண்டும் கூட்டத்தினரின் கூற்றுக்கேற்ப தன் முடிவை மாற்றி மாற்றிப் பேசும் பச்சோந்தியாக ஒச்சுமெலோவ் இருக்கிறான். இது உலகம் முழுவதிலும் உள்ள அரசுகளின் அதிகார வர்க்கத்தினரில் பெரும் பாண்மையோரின் இயல்பான குணத்தை வெளிப்படுத்துகிறது. இறுதியில் ரையூகின்னுக்கும் நாய்க்கும் ஒச்சுமெலோவிடம் இருந்து என்ன நியாயம் கிடைத்தது? கதையைப் படித்துப் பார்த்துத் தெரிந்துகொள்ளுங்கள். முன்பே படித்திருந்தால் மீண்டும் ஒருமுறை படித்துப் பாருங்கள்.



## கடமை வாழ்க

நன்றாகப் புரிகிறது  
அதிகாரத் துறைகளுக்கு  
அடியேன் அனுப்பிய  
அத்தனை மனுக்களும்  
கழுதைக்கும்  
குப்பைத் தொட்டிக்குமே என்று.  
அதோ  
எங்கள் ஊர் ஊரணியின் மரணம்  
ஆக்கிரமிப்புகளால்.

■ **ஆல.தமிழ்ப்பித்தன்,** *புனல்வேலி.*



# பெண்ணடிமைத்தனத்தின் வேர்

மனு நீதியின் ஒன்பதாவது அத்தியாயத்தின் 3வது ஸ்லோகம் என்ன சொல்கிறது என்று பார்ப்போம்.

“பால்யே பிதிர்வஸே ஹிஷ்டேது
பாணிக்ரகஹா யௌவ்வனே
புத்ரானம் பார்த்தரீ ப்ரேது
நவஜேத் ஸ்த்ரீ ஸ்வதந்தரம்”

அதாவது, “பெண்ணே.. நீ குழந்தைப் பருவம் முழுவதும் அப்பன் சொல்வதைக் கேள். வளர்ந்து மணமானதும் கணவன் சொன்னதைக் கேள். உனக்குக் குழந்தை பிறந்து தலையெடுத்தது முதல் உன் மகன் சொல்வதைக் கேட்க வேண்டும்” என்று முதல் மூன்று வரிகளுக்கு அர்த்தம். நான்காவது வரி இன்னும் தெளிவாகச் சொல்கிறது. அதாவது, “பெண்ணே, உனக்கு இதுதான் கதி. — நீ சுதந்திரமாக வாழத் தகுதியற்றவள் - ஆகவே ஆண் சொற்படிக் கேள்.”

கணவன் சூதாட்டக்காரனாயினும், தீராத வியாதியஸ்தனாக இருந்தாலும், குடிகாரனாக இருந்தாலும், மனைவி அவனுக்குப் பணி புரிவதையே கடமையாகக் கொள்ள வேண்டும் என்றும், இதனை மீறுகிற பெண்கள் செருக்கு உடையவர்கள் என்றும் அவர்களுக்கு அழகு செய்தல், ஆடை, படுக்கை ஆகியவற்றை விலக்கி வைக்க வேண்டும் என்றும் மனுதர்மத்தின் ஒன்பதாவது அத்தியாயம் 78வது ஸ்லோகம் சொல்கிறது.

இளமையில் தந்தையாலும், பருவ காலத்தில் கணவனாலும், முதுமையில மைந்தராலும் காக்கப்பட வேண்டியவள் என்பதாலும், இவர்களுக்கு அந்தந்தப் பருவத்தில் அடங்கி நடக்க வேண்டியவள் என்பதாலும், பெண்கள் எக்காலத்தும் தன்னிச்சையாக இருக்கக் கூடாது என்று தெளிவாகவே மனுநீதியின் 9வது அத்தியாயத்தின் 3வது ஸ்லோகம் சொல்கிறது.

ஆக, இன்றளவும் தொடரும் பெண்ணடிமைத்தனத்திற்கு வேர் எங்கிருக்கிறது பார்த்தீர்களா?

❒ **கே. வரதராஜன்,** *நூல்: சாதி — மதம் வர்க்கம், பக்கம்:43, பாரதி புத்தகாலயம்.*

**சிரிக்க சிந்திக்க..**

**இரண்டு பெண்கள் பேசிக்கொள்கின்றனர்:**

*“கண்டக்டரை கல்யாணம் பண்ணினது பெரிய பிரச்சினையா இருக்குடீ”*

*“ஏன்டீ அப்படி சொல்ற”*

*“பிறகென்னடி ‘சில்லறை’ விஷயத்துக்கெல்லாம் சண்டை போடுறாரு”*

❒ **எஸ். சொக்கர்,** *திருத்தங்கல்.*

# வல்லரசு

காலை ஒற்றனின் உதயம்.
ஓலை பாரத மாதாவிடம் இருந்து
அனைத்து மாநில அன்னைகளும் கூடுதற்கு
அணியமாவோம் என்று.
கேரள சேச்சி மகள் முல்லையுடன்
ஆந்திரத்தாய் மகள் பாலாவுடன்
கன்னட தேவி மகள் காவிரியுடன்
மற்ற மாநில அன்னைகள்
அவரவர் குழந்தைகளுடன்
தமிழன்னை மட்டும் தாகத்துடன்.
அனைவரும் உறுதிமொழி எடுத்தனர்
ஒருமித்த குரலில்
'தீவிரவாதத்தைத் தீர்த்துக் கட்டுவோம்' என்று.
அனைவருக்கும் அறுசுவை உணவு பரிமாறப்பட்டது.
அம்மாக்கள் சாப்பிட மகள்கள் பரிமாற
மங்கல இசையில் சமபந்தி போஜனம்.
தமிழ்த்தாய்க்கு விக்கல் எடுத்தது.
தண்ணீர் தரச் சொன்னாள் பாரதமாதா.
முல்லை வர முறைத்த சேச்சி
'இவள் செம்பு ஓட்டை' என்றாள்.
பாலா வர ஆந்திரத் தாய்
'எனக்கும் விக்கல் எடுக்குது' என்றாள்.
காவிரி கொண்டு வந்த செம்பைப்
பிடுங்கிய கன்னட தாயோ
'எனக்குப் புரையேறும்' என்றாள்.
தமிழ்த்தாய் தன் நிலை தவறி
தரையில் விழ —— தன்
குழந்தைகளையே காவு வாங்கிய
கடல் மாதாவே கண்ணீர் தராமல்
தண்ணீர் தந்தாள்
கடல் நீரைக் குடிநீராக.
நம் மனதில் உள்ள தீவிரவாதத்தைத்
தீர்க்கவே நம்மால் முடியவில்லை..
நாம் எப்படி? ம்..
என யோசித்த பாரத மாதா
'அந்நியனை ஆளவிடுவோம்;
அவன் ஆட்சியிலாவது மலரட்டும்
சமத்துவம்' என
'அடிமை மாதாவிற்கு ஜே!' என்றாள்.
ஜே! ஜே! ஜே! என்றார்கள் எல்லோரும்
எதற்கென்று தெரியாமல்!

❒ **ஆ. கா. ஏழுமலை,** *முடியனூர்.*

# வாழ்க்கையில் தோல்வியில்லை

வாழ்க்கையென்றாலும் சரி, கல்வி என்றாலும் சரி தொழில் என்றாலும் சரி அவற்றில் வெற்றி பெற்றவர்களைத்தான் சரித்திரம் பேசும். தோல்வியைக் கற்றுக் கொள்வதற்கு யாருக்கும் பாடமும் பயிற்சியும் தேவையில்லை. ஆனால் எதிலும் வெற்றி பெறுவதற்கு கடினமான முயற்சி, வழி நடத்துபவரின் பயிற்சி, கட்டுப்பாடு போன்றவற்றைக் கடைப்பிடித்தால்தான் எதிலும் முதன்மை பெற முடியும். உழுகிற நேரத்தில் ஊர்க்காடு சுற்றிவிட்டு அறுக்கிற நேரத்தில் அரிவாளைத் தூக்குகிறவன் விவசாயம் விளங்குமா? கடையை அடிக்கடி மூடிவிட்டு எந்த சரக்கு கேட்டாலும் இல்லை என்று கூறி வியாபாரம் செய்பவன் 'வின்'பண்ண முடியுமா? மற்ற நேரங்களிலெல்லாம் கிரிக்கெட் மட்டையைத் தூக்கிக் கொண்டும், தொலைக்காட்சியைப் பார்த்துக்கொண்டும் படிக்காமல் பொழுதைப் போக்கிக்கொண்டிருந்தவனால் பரீட்சையை நன்றாக எழுதிப் பாஸ்பண்ண முடியுமா? வாங்குகின்ற சம்பளத்தில் மது, மாது என்று மணம் போன வழியில் வாழ்க்கை நடத்துபவனின் வாழ்க்கை கடைசி வரை சென்று கரையேறுமா?

அதனால்தான் ஒவ்வொரு துறையிலும்சரி, வாழ்க்கையிலும் சரி சாதித்தவர்கள், சரித்திரம் படைத்தவர்களின் பின்னணியைப் பாருங்கள். அவர்கள் சென்ற வழியிலே நாமும் சென்றால் அவர்களைப்போல் நாமும் வாழ்விலும் வெற்றி பெறலாம். திறமை உள்ளவன் எங்கிருந்தாலும் தேசம் அவனிடம் ஓடும். நமக்கு முன்னே நடந்து செல்பவன் தடுக்கி விழுந்தால் நாம் சுதாரித்துக்கொண்டு அந்த இடத்தில் ஒரு பள்ளம் உள்ளது என்பதை உணர்ந்து அதில் விழுவதைத் தவிர்க்க வேண்டும்.

இதைத்தான் ஒரு கவிஞர்:

"இருட்டினில் வாழும் இதயங்களே - கொஞ்சம்
வெளிச்சத்தில் வாருங்கள்
நல்லவர் உலகம் எப்படியிருக்கும்
என்பதைப் பாருங்கள்
எத்தனை காலம் மனிதன் வாழ்ந்தான்
என்பது கேள்வியில்லை
அவன் எப்படி வாழ்ந்தான் என்பதை உணர்ந்தால்
வாழ்க்கையில் தோல்வியில்லை", என்றார்.

❐ **எஸ். குருவையா,** *திருத்தங்கல்.*

இந்தியா முழுவதும் மலத்தை அள்ளி தலையில் சுமந்து அகற்றும் பணியில் ஆறு லட்சத்து ஆயிரம் பேர் ஈடுபட்டுள்ளனர். பாதாள சாக்கடைகளை சுத்தம் செய்யும்போது விஷவாயு தாக்கி 22 ஆயிரத்து 327 பேர் மரணமடைந்துள்ளனர். இவர்கள் அனைவரும் அருந்ததிய மக்களாகவே இருக்கிறார்கள்.

■ **தோழர் கே. வரதராஜன்** *(2009க்கு முன்பு)*

## உதவும் கரங்கள்

1. மருத்துவர் திரு. த. அறம், தனுஷ்கோடி மருத்துவமனை, சாத்தூர் ரூ. 500/-
2. திரு. ஏ. ஜி. கண்ணன், தமுஎகச, வெல்கம் ஸ்டுடியோ, ஆலங்குளம் ரூ. 200/-
3. திரு. சிவசுப்பிரமணியன், தகஇபெமன்றம், இராஜபாளையம் ரூ. 200/-
4. திரு. க. திலீபன், திருவில்லிபுத்தூர் ரூ. 200/-
5. முனைவர் ரெஜினா பாப்பா, காரைக்குடி ரூ. 200/-
6. கவிஞர் சுபாஷினி, எல்.ஐ.சி முகவர், இராஜபாளையம் ரூ.150/-
7. தோழர் வி. மகேந்திரன், டான்செம், ஆலங்குளம் ரூ. 100/-
8. திரு. ராம்குமர், இராஜபாளையம் ரூ. 100/-
9. கவிஞர் ஆல. தமிழ்ப்பித்தன், புணல்வேலி ரூ. 50/-
10. தோழர் த. செல்வக்குமார், மாதாங்கோவில்பட்டி ரூ. 50/-
11. தோழர் ஆர். ரெங்கசாமி, தமுஎகச, சிவகாசி ரூ. 50/-
12. தோழர் வி. மோகன்ராஜ், எல்.ஐ.சி முகவர், ஆலங்குளம் ரூ. 30/-

## மன ஓசை

*'நிகரன்' - இதழ் 2 படித்தேன். 'நிகர்' - என்பது அழுத்தமும் திருத்தமும் கொண்ட செஞ்சொல். காலம் தோறும் நிகழ்த்தப்பட்ட, படைப்பாளிகளுக்கெதிரான அடக்குமுறையும், வன்முறையும், அதன் நீட்சியாக எழுத்தாளர் பெருமாள் முருகனுக்கு நேர்ந்துள்ளது. அவர் மீது கவிந்துள்ள இருளின் படலம் விரைவில் மறையும். ஷெல்லியின் அறிமுகம் சுருங்கியும் தெளிந்தும் வந்துள்ளது. நிறைய கவிஞர்கள் எழுதி உள்ளனர். 'நிகரன்' - தனது தனித் தன்மையுடன் பயணிக்கத் தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்கம் வாழ்த்திப் பாராட்டி வரவேற்கிறது.அன்புடன்*

❒ **பூ. அ. இரவீந்திரன்,** *தலைவர், தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்கம், கோவை.*

*இதழின் விலை காட்டிவரும் இதழ்களுக்கு முன்னால் இச்சமுகத்தின் அவல நிலை காட்டிவரும் நிகரனுக்கு நிகர் நிகரனே. "என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில்" என்று ஒரு கவிஞர் 'விவசாயி ' திரைப்படத்தில் பாடியிருப்பார். அதைப்போல, அயலகத்து அறிஞர்களையும் இலக்கியங்களையும் எடுத்துக்காட்டும் நிகரன் இதழ், மண்ணுக்குள் வைரமாய்க் கிடக்கும் இலக்கியங்களில் திருவள்ளுவர், பாரதி இவர்களோடு அவ்வையார், கம்பர், திருமூலர், பதினெண் சித்தர்கள், குணங்குடி மஸ்தான், வள்ளலார், தாயுமானவர், சுதந்திரப் போராட்டத் தியாகிகள் வீர வரலாறு, தமிழ் வளர்த்த புலவர்கள் என இவர்களின் கருத்து வைரத்தையும் சுமந்து வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.*

❒ **ஆல. தமிழ்ப்பித்தன்,** *புணல்வேலி.*

*திரு. நிகரன் ஆசிரியர்அவர்களுக்கு வணக்கம். தங்கள் சிற்றிதழ் நண்பர்களோடு படித்து மகிழ்ந்தேன். சின்ன சின்ன செய்திகள், கவிதைகள், மாற்றுமொழி பட அறிமுக விமர்சனம், தலை சிறந்த உலக இலக்கிய அறிமுகம் என.. சிறிய இதழில் பெரிய செய்திகளாய்த் தொடர்கிறது. போராட்ட களமிக்க 'நிகரன்' பயணம் தொடர வாழ்த்துக்கள். தங்களன்புள்ள,*

❒ **எம். சேகர்,** *சிவகாசி.*



## மார்ச் 23
## பகத்சிங்
## நினைவுநாள்

"நாங்கள் மனித வாழ்வினை விவரிக்க இயலாத புனிதமானதாகக் கருதுகிறோம். மனிதத் தத்துவத்திற்கு சேவை செய்வதிலே மற்றவர்களுக்குத் தீங்கிழைப்பதைக் காட்டிலும், எங்கள் உயிரை நாங்களே மாய்த்துக் கொள்வதை விரும்புவோம். நாங்கள் ஏகாதிபத்தியவாதிகளின் கூலிப்பட்டாளத்தைப் போன்றவர்களல்ல. அவர்களுக்கு ஈவிரக்கமின்றி மற்றவர்களைக் கொல்வதையே கற்பிக்கிறார்கள். நாங்கள் வாழ்க்கையைக் கவுரவிக்கிறோம். ஆன மட்டும் அதைப் பாதுகாக்கவே முயற்சிக்கிறோம்."

□ **பகத்சிங்**

"புரட்சி உலகத்தின் விதி. அது மனிதகுல முன்னேற்றத்தின் அடிப்படை. ஆனால் அதற்கு ரத்தம் தோய்ந்த போராட்டம் தவிர்க்க முடியாததல்ல. தனிநபர் பலாத்காரத்திற்கு அதில் இடமில்லை. அது வெடிகுண்டுகள், துப்பாக்கிகளைக் கொண்ட சம்பிரதாயமல்ல. புரட்சியை எதிர்ப்பவர்கள் வெடிகுண்டுகள், துப்பாக்கிகள், ரத்தக் களறி முதலியவைகளையே புரட்சி என்று தவறான பிரச்சாரம் செய்கின்றனர். ஆனால் புரட்சி இவற்றுக்குள்ளேயே அடங்கிவிடவில்லை. இவை புரட்சியின் சாதனங்கள் ஆகலாம். ஆனால் இந்தச் சாதனங்களைப் பயன்படுத்துவதற்குப் பின்னால் புரட்சியின் உண்மையான வலு, சமுதாயத்தைப் பொருளாதார ரீதியிலும், அரசியல் ரீதியிலும் மாற்ற வேண்டுமென்னும் மக்களின் தீவிரமான விருப்பமே இருக்கும். நம் காலத்திய நிலைமையில் சில தனிநபர்களைக் கொலை செய்வதே புரட்சியின் நோக்கமல்ல. மனிதனை மனிதன் சுரண்டிக் கொள்ளையடிக்கும் முறையை முடிவுக்குக் கொண்டு வந்து நம் நாட்டுக்குச் சுதந்திரத்தைப் பெறுவதே புரட்சியின் நோக்கமாகும்."

□ **பகத்சிங்**

*நூல்: விடுதலைப் பாதையில் பகத்சிங், பாரதி புத்தகாலயம்.*



## பார்க்க வேண்டிய குறும்படம்



### காத்திருப்பு

பாலுமகேந்திரா கதை நேரத்தில் 26வது கதையாக இடம் பெற்றிருக்கிறது. பிரபல எழுத்தாளர் சு. சமுத்திரத்தின் கதை. கேமிராக் கவிஞர், இயக்குநர் பாலு மகேந்திராவின் கைவண்ணத்தில் மெருகேற்றப் பட்டிருக்கிறது. வெளியூரில் வேலை பார்க்கும் தன் கணவன் எப்போது வருவான் என்று காத்திருக்கும் உடல் நலமில்லாத மனைவி. அவளைக் கவனித்துக் கொள்ளவேண்டிய அவசியத்தின் காரணமாக அலுவலக வேலை மட்டுமின்றி அதிகாரிகளின் வீடுகளுக்கும் வேலை பார்த்தாவது அவர்களின் இரக்கத்தைப் பெற்று தனது ஊருக்கருகே மாற்றலாகிச் சென்று விடலாம் என்று காத்திருக்கும் ஒரு அலுவலக உதவியாள். தனது மேலதிகாரிகளின் வீடுகளில் துனி துவைப்பது, பாத்திரங்கள் கழுவுவது, செடிக்கு உரமிடுவது, நாய் குளிப்பாட்டுவது என்று எல்லாம் செய்தாலும் அவனால் அவனுடைய காரியத்தை நிறைவேற்றிக் கொள்ள முடிகிறதா? தங்களின் குறுகிய சுயநலத்திற்காக அவனைப் பயன்படுத்திக் கொள்வதோடு இனிக்க இனிக்கப் பேசி அவனுக்கு உதவி செய்வது போல நடித்து அவனை ஏமாற்றும் மேலதிகாரிகள் மற்றும் அவர்கள் குடும்பத்தினரின் ஈவு இரக்கமற்ற பித்தலாட்டமான வெளிவேடப் பேச்சையும் அவர்களின் உண்மையான குணத்தையும் வெளிப்படுத்திக் காட்டும் அருமையான குறும்படம். இணையதளத்தில் பார்க்க முடியும். தேடிப்பாருங்கள்.



